# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## மானியக் கோரிக்கை எண்: 46





# தமிழ் வளர்ச்சி

அறிவிப்புகள் 2020 - 2021


**க.பாண்டியராஜன்**

தமிழ் ஆட்சிமொழி , தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் 46

## அறிவிப்புகள்
## 2020 - 2021

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும்
தொல்லியல் துறை அமைச்சர்

1. வல்வில் ஓரிக்கு ஒரு நினைவுத் தூண் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையிலும் சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் 40 பேருக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண் திருச்சிராப்பள்ளியிலும் நக்கீரருக்கு ஒரு நினைவுத் தூண் மதுரை மாவட்டம் திருமங்கலம் திரளி கிராமத்திலும் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு நினைவுத் தூண் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையிலும் என மொத்தம் 4 நினைவுத் தூண்கள் இவ்வாண்டு நிறுவப்பட தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சமும் நினைவுத் தூணிற்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்து மலர்தூவிச் சிறப்புச் செய்ய தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, சங்கப் புலவர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் நினைவுத் தூண்கள் நிறுவி ஆண்டுதோறும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரிக்கு ஒரு நினைவுத் தூணும் திருச்சிராப்பள்ளியில் சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் 40 பேருக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூணும், மதுரை மாவட்டம் திருமங்கலம் திரளி கிராமத்தில் நக்கீரருக்கு ஒரு நினைவுத் தூணும் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு நினைவுத் தூணும் என 4 நினைவுத் தூண்கள் அமைத்திட தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சமும், இந்நினைவுத் தூண்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்க்கவிஞர் நாளான ஏப்பிரல் 29ஆம் நாளன்று மலர் தூவிச் சிறப்புச் செய்திட ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 81 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சிறந்த நூல் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டாம் பரிசாக ரூபாய் 20,000/- மற்றும் இரண்டாம் பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார்க்கு ரூ.5000/- வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் படி 33 வகைப்பாடுகளின் கீழ் ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் முதல் பரிசு ரூ.30,000/- மற்றும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தார்க்கு ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் இரண்டாம் பரிசாக ரூபாய் 20,000/- மற்றும் இரண்டாம் பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார்க்கு ரூ.5000/- வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சத்து 25 ஆயிரம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி வேண்டி வரப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் கீழ்த் தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூபாய் 7 இலட்சத்து 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. குறள் பரிசுத் திட்டத்தின் கீழ்ப் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 70 லிருந்து 111 ஆக உயர்த்தியும் ஆண்டுக்குக் கூடுதலாக ரூபாய் 4 இலட்சத்து 10 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு **இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** குறள் பரிசுத் திட்டத்தின் கீழ்ப் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 70 லிருந்து 111 ஆக உயர்த்தப்படும். மாவட்டத்திற்கு 3 பேர் வீதம் 37 மாவட்டத்திற்கு மொத்தம் 111 பேர்க்குக் குறள் பரிசுத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 10ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிவரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து இளந்தமிழர் இலக்கிய விருதும் விருதுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரமும் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இளம் வயதிலிருந்து (30க்குள்) தமிழுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிவரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து இளந்தமிழர் இலக்கிய விருது என்ற பெயரில் புதிய விருது தோற்றுவிக்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் மற்றும் தகுதியுரை வழங்கிப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பெறுவர். விருதுத் தொகை ரூபாய் 10 ஆயிரம், தகுதியுரை, பொன்னாடை மற்றும் பிறசெலவினங்களுக்கு ரூபாய் 10 ஆயிரம் என 37 மாவட்டத்திற்கும் மொத்தம் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 40 ஆயிரம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைப் பொதுப் பணித் துறை வாயிலாக மேற்கொள்ள ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, தமிழ் வளர்ச்சித் துறையால், ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டுவரும் 9 தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கும் மாலை அணிவிப்பு நிகழ்ச்சி நாளன்று துணிப் பந்தல், நெகிழி நாற்காலிகள், சிவப்புக் கம்பள விரிப்பு, சிலைக்கு வண்ணம் பூசுதல், சிலையைச் சுற்றிப் பூந்தொட்டிகள் வைத்தல் மற்றும் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்ளப்படும். இதற்கென ஒரு சிலைக்கு ரூபாய் 20 ஆயிரம் வீதம் 9 சிலைகளுக்கும் மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. ஆட்சிமொழிக் கருத்தரங்கம், தமிழ்மன்றப் போட்டிகள், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை ஆகியவற்றிற்குக் கூடுதலாக ரூபாய் 19 இலட்சத்து 80 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு அலுவலர்களுக்கு மாவட்டந்தோறும் நடத்தப்பட்டுவரும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்குத் தற்போது வழங்கப்படும் தொகை ரூபாய் 20 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்த ஒரு மாவட்டத்திற்குத் தற்போது வழங்கப்படும் சில்லரைச் செலவினத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை நடத்திட தற்போது வழங்கப்படும் தொகை ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 19 இலட்சத்து 80 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

8. எல்லைக் காவலர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 4500/-லிருந்து ரூபாய் 5500/-ஆக உயர்த்தி வழங்கப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ்த் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 4500/-லிருந்து ரூபாய் 5500/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 16 இலட்சத்து 44 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

9. எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்க்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2500/- லிருந்து ரூபாய் 3000/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்க்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 2500/- லிருந்து ரூபாய் 3000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சத்து 22 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 3500/-லிருந்து ரூபாய் 4500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ்த் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 3500/-லிருந்து ரூபாய் 4500/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 59 இலட்சத்து 64 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2000/-லிருந்து ரூபாய் 2500/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ்த் தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 2000/-லிருந்து ரூபாய் 2500/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 34 இலட்சத்து 50 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

12. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2500/-லிருந்து ரூபாய் 3500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ்த் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2500/-லிருந்து ரூபாய் 3500/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 71 இலட்சத்து 88 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

## 13. திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் வெளியிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழக அரசால் வெளியிடப்பட்ட திருக்குறள் அரபு மொழிபெயர்ப்பு நூல் உலக அளவில் மாபெரும் அங்கீகாரத்தையும் தமிழின் பெருமையை உயர்த்துவதாகவும் அமைந்தது. இதனைக் கருத்தில் கொண்டு திருக்குறள் அரபுமொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து வெளியிடத் தொடராச் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

14. கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாகத் திங்கள் தோறும் ரூபாய் 3000/- வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பிற மாநிலங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கித் தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. அவ்வகையில் கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயிலும் 15 மாணவர்களுக்குத் திங்கள் தோறும் கல்வி உதவித் தொகையாக ரூபாய் 3000/- வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 95 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

15. மாவட்டந்தோறும் 10 பள்ளிகளில் தமிழ் மன்றம் தோற்றுவிக்க ரூபாய் 22 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இளம் வயதிலேயே மாணவர்களிடையே தமிழின் மீது பற்று ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கும் வகையில் தமிழ் மன்றம் தோற்றுவிக்கப்படும். அவ்வகையில் தமிழ் நாட்டிலுள்ள 37 மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு 10 பள்ளிகள் வீதம் தமிழ் மன்றம் தோற்றுவிக்கப்பட்டு ஒரு பள்ளிக்கு ரூபாய் 6 ஆயிரம் வீதம் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 22 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

16. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மூலம் சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்திச் செயற்படுத்திட ரூபாய் 4 இலட்சத்து 21 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 37 கல்லூரி மாணவர்களுக்குச் **சொற்குவை மாணவத் தூதுவர்** பயிற்சித் திட்டம் முதல் கட்டமாகச் சென்னையில் உள்ள 20 கல்லூரிகளிலிருந்து 10 மாணவர்கள் வீதம் 200 பேர் தெரிவுசெய்யப்படுவர். இதில் ஒரு பிரிவுக்கு 50 மாணவர்கள் வீதம் 4 பிரிவாகப் பிரிக்கப்பட்டு இவர்களுக்கு 4 நாள்கள் சொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்படும். பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் **சொற்குவை மாணவத் தூதுவர்** எனச் சான்றிதழ் வழங்கப்படும். இம்மாணவர்கள் மூலம் அவர்கள் பயிலும் கல்லூரியில் உள்ள மற்ற மாணவர்களுக்கும் சொல்லாக்கப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 21 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

17. கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் வகையில் சொல்லின்தாய் என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் வகையில் **சொல்லின்தாய்** என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் வழங்கப்படும். மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம் 37 மாவட்டத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்து தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது **சொல்லின்தாய் விருது** வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

18. பிற மொழிக் கலப்பில்லாமல் தூய தமிழிலேயே பேசுவோரைப் பாராட்டும் வகையில் தூய தமிழ்ப் பற்றாளர் என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி **அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** நடைமுறை வாழ்க்கையிலும் பேச்சு வழக்கிலும் பிற மொழிக் கலப்பில்லாமல் தூய தமிழிலேயே பேசுவோரை ஊக்கப்படுத்தும் வகையில் **தூய தமிழ்ப் பற்றாளர் விருது** அகரமுதலித் திட்ட இயக்ககம் மூலம் வழங்கப்படும். இதற்கென மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 மாவட்டத்திற்குத் தெரிவுசெய்து தமிழ் அகராதியியல் நாள் விழாவில் **தூய தமிழ்ப் பற்றாளர் விருது** வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். விருது பெறுபவர்க்கு விருதுத் தொகையாக ரூபாய் இருபதாயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்விருதுக்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி மற்றும் அச்சு ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் தூய தமிழ் ஊடகம் என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி மற்றும் அச்சு ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் **தூய தமிழ் ஊடக விருது** ஆண்டுதோறும் அகரமுதலித் திட்ட இயக்ககம் மூலம் தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது வழங்கப்படும். ஆண்டுதோறும் ஒரு காட்சி ஊடகத்தையும் ஓர் அச்சு ஊடகத்தையும் தெரிவு செய்து **தூய தமிழ் ஊடக விருது** மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். விருதுத் தொகையாக ஓர் ஊடகத்திற்கு தலா ரூபாய் 50 ஆயிரம் வீதமும் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் இதர செலவினங்களுக்கு தலா ரூ. 25 ஆயிரம் வீதமும் வழங்கப்படும். இவ்விருதுக்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

20. பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் நற்றமிழ்ப் பாவலர் விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தங்களின் கவிதைப் படைப்புகளில் (மரபுக் கவிதை, புதுக் கவிதை) பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் **நற்றமிழ்ப் பாவலர் விருது** ஆண்டுதோறும் தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது இரண்டு பேருக்கு வழங்கப்படும். இவ்விருது பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரம் வீதமும், பாராட்டு சான்றிதழ் மற்றும் இதர செலவினங்களுக்கு தலா ரூ. 25 ஆயிரம் வீதமும் வழங்கப்படும். இவ்விருதுக்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

21. துறைசார் சொற்குவை வல்லுநர் குழுக்கூட்டம் ஆண்டுதோறும் நடத்திட ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சொற்குவைத் திட்டத்தின் கீழ்த் துறை வாரியாக வல்லுநர் குழுக்கூட்டம் நடத்திப் பல துறை சார்ந்த கலைச் சொற்களைத் தொகுத்துச் சொற்குவையில் சேர்த்தல். இதன்பொருட்டுத் துறைசார் சொற்குவை வல்லுநர் குழுக்கூட்டம் ஆண்டுதோறும் நான்கு முறை நடத்தப்படும் இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 22. தமிழ்க் கலைக்கழகக் கூட்டச் செலவினத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்க் கலைக் கழகம் மாதம் இருமுறை கூடி மாதம் ஒன்றுக்கு 1000 கலைச்சொற்களை வடிவமைக்கும் இலக்குடன் செயற்பட்டு வருகிறது. ஒரு கூட்டத்திற்கான செலவினத் தொகை ரூ.1500/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனக் கூடுதலாக ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 4 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

## 23. தமிழர் வாழ்முறைப் பண்பாட்டு அகராதி உருவாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழர் வாழ்முறைப் பண்பாட்டில் உள்ள அனைத்துச் சொற்களையும் திரட்டி அவற்றிற்கான பொருள் விளக்கப் படங்களுடன் **தமிழர் வாழ்முறைப் பண்பாட்டு அகராதி** இரண்டு ஆண்டுக்கால அளவில் அகர முதலித் திட்ட இயக்ககம் மூலம் உருவாக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 75 ஆயிரம் மற்றும் தொடராச் செலவினமாக ரூபாய் 75 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 24. ஒருபொருட் பன்மொழி அகராதி வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒருபொருளைத் தரும் அல்லது ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள் தமிழ் மொழியின் சிறப்பாகும். இன்றைய தலைமுறைக்குத் தமிழ்மொழி வளத்தினை உணர்த்தி அவர்களுக்குப் பயன்படும் வகையில் **ஒருபொருட் பன்மொழி அகராதி** அகர முதலித் திட்ட இயக்ககம் மூலம் உருவாக்கி எழுதுபொருள் அச்சுத்துறை வாயிலாக ஓராண்டுக் கால அளவில் அச்சிட்டு வெளியிடப்படும்.

## 25. வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி ரூபாய் 12 இலட்சம் செலவில் வெளியிடப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் ஒரு பகுதியில் வழங்கும் சொல் வேறு ஒரு பகுதியில் வழங்காதது மட்டும் அல்ல, நாளடைவில் வட்டார வழக்குச் சொற்கள் அடுத்த தலைமுறைக்குப் புரியாமல் போய்விடும் என்பதனால் அச்சொற்களைப் பதிவு செய்யும் வண்ணம் தமிழ்நாட்டின் பகுதிகளைச் சென்னை மண்டிலம், சேலம் மண்டிலம், திருச்சிராப்பள்ளி மண்டிலம், திருநெல்வேலி மண்டிலம், மதுரை மண்டிலம், கோயம்புத்தூர் மண்டிலம் என 6 மண்டிலங்களாகப் பகுத்து அப்பகுதிகளுக்கு நேரில் சென்று களஆய்வு செய்து அப்பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்களைப் பொருளுடன் தொகுத்து ஒரே தொகுதியாக **வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி** என்ற பெயரில் அகரமுதலித் திட்ட இயக்ககம் மூலம் 2 ஆண்டுக் கால அளவில் வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சம் மற்றும் தொடராச் செலவினம் ரூபாய் 6 இலட்சம் என மொத்தம் ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

26. திருக்குறள் களஞ்சியம் மற்றும் மின் தகவல் மையம் ரூபாய் 10 இலட்சம் செலவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகெங்கும் நடைபெற்றுவரும் திருக்குறள் சார்ந்த ஆய்வுப் பணிகள், மொழிபெயர்ப்புகள், நீதிக் கதைகள், நாடகங்கள், கூத்துகள், இசை போன்ற அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும்படியான, திருக்குறள் களஞ்சியம் மற்றும் மின் தகவல் மையம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

27. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் மற்றும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தில் அமைந்துள்ள காட்சிகளைப் பார்வையாளர்கள் அவர்களது செல்பேசி வாயிலாகவே இசையுடன் காட்சி விளக்கத்தை தமிழ் / ஆங்கிலத்தில் தானாக அறிந்துகொள்ள வசதியை ரூபாய் 5 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் மற்றும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் ஆகியவற்றில் அமைந்துள்ள காட்சிகளை வருகைதரும் பார்வையாளர்களே அவர்களது செல்பேசி வாயிலாக இசையுடன் காட்சி விளக்கத்தை (Augmented Reality) தமிழ்/ஆங்கிலத்தில் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரமும், தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

28. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையயர் சுவடிகள் ஆய்விருக்கை ரூபாய் 1 கோடி செலவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சங்க நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சு வடிவில் பதிப்பித்த தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையயர் அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உ.வே.சாமிநாதையயர் சுவடிகள் ஆய்விருக்கை நிறுவப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

29. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு (ம) வளாக மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள புரட்சித்தலைவர் நூற்றாண்டு ஆய்வு நூலக உள்கட்டமைப்பு மேம்படுத்துதல் அண்ணா கருத்தரங்கக் கூடத்திற்கு இருக்கைகள் வாங்குதல், அலுவலகப் பயன்பாட்டிற்குப் புதிய இருசக்கர வாகனம் வாங்குதல், கண்காணிப்புக் கருவிகள் அமைத்தல், தானியங்கி மின்னாக்கி வாங்குதல், ஒளிரும் நியான் விளக்குப் பெயர்ப் பலகைகள் அமைத்தல் போன்றவற்றிற்குத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

30. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாகத் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆய்வுத் திட்டம் ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் பொருட்டு, இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, போர்னியா போன்ற நாடுகளில் நம் முன்னோர்களின் தாக்கம் பற்றியும், அந்நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை பற்றியும், பண்பாட்டுச் சின்னங்கள், தமிழ் மொழி அறிவின் தேவை பற்றியும் அறிந்து பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிக்கவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், மலேசியப் புத்ரா பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

31. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புதியதாக மின்மாற்றிகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இரண்டு உயரழுத்த மின்மாற்றிகள் (250 கிலோவோல்ட் ஆம்பியர்) மின் பாதுகாப்புக் கருதிப் புதிதாக மாற்றியமைக்கப்படும். இதற்கெனத் தொடரா்ச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

32. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துறைபோகிய அறிஞர்களின் ஆய்வுப் பேருரைத் தொடர் ரூபாய் 3 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழாய்விற்கும், தமிழகத்திற்கும், சமூகத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில், உலகளவில் உயராய்வில் ஈடுபட்டும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியும் சாதனை புரிந்துள்ள பேரறிஞர்களின் புதிய கருத்துகளையும், ஆய்வு அனுபவங்களையும் கல்வியாளர்கள், மாணவர்கள் பெறும் பொருட்டு மொழி, இலக்கியம், மொழியியல், கலை, இசை, நாடகம், வரலாறு, தொல்லியல் பண்பாடு, அறிவியல் தொழில்நுட்பம், சமூக மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அண்மைக்கால ஆய்வுகள் எனப் பலதுறைசார்ந்த பொருண்மைகளில் துறைபோகிய அறிஞர்களின் **ஆய்வுப் பேருரைத் தொடர்** தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும். இந்திய அளவில் ஒருவரும், பன்னாட்டு அளவில் ஒருவரும் என ஆண்டுக்கு இரண்டு உரை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

33. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள் - ஆசிரியர்களுக்கான இலக்கிய இலக்கணப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் ரூபாய் 44 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** புலம் பெயர்ந்த இந்தியத் தமிழர் வாழும் நாடுகளான ரியூனியன் தீவு மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள இளந்தமிழ் மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழ்ப் பயிற்சியும் தமிழ்ப் பண்பாடு மற்றும் கலைப் பயிற்சிகளையும் மேலும் பகுதி நேரத் தமிழ்ப் பள்ளிகளில் தமிழைக் கற்பித்துவரும் முறையாகத் தமிழைப் பயிலாத ஆசிரியர்களுக்கும் இலக்கிய-இலக்கணப் பயிற்சி மற்றும் தமிழிசைப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 44 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

34. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உலகத்தரத்தில் நாடகத்துறையின் கட்டமைப்பு வசதிகள்ரூபாய் 29 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் நாடகக் கல்வி ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உலகிலேயே முதுகலை நாடகக் கல்வியைத் தாய்மொழி தமிழில் வழங்கும் ஒரே துறை தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறையாகும். இத்தகைய முதுகலை நாடகக் கல்வியைப் படித்து அறிந்துகொள்வது என்பதைவிட முழுக்க முழுக்கச் செய்முறை சார்ந்த புலம் என்பதால் மேடைப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள், அரங்க நிருமாணப் பொருள்கள், உடை வடிவமைப்புப் பொருள்கள், இசைக் கருவிகள், அரங்க ஒளி விளக்கு, அரங்க ஒலிக் கருவி, நடிப்பிற்கான துணைக் கருவிகள் இவையே அடிப்படையான தேவையாக உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் மரபு வழி நாடகக் கலை வகுப்புகள் தொடங்கப்பெற்றுக் காணொலிக் காட்சி வழி உலகளாவிய அளவில் கொண்டு செல்வதற்கு நாடகத் துறையின் கட்டமைப்பின் வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூபாய் 28 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

35. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்லூரி 2020-2021 ஆம் கல்வி ஆண்டு முதல் ரூபாய் 39 இலட்சத்து 28 ஆயிரம் செலவில் நிறுவப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களைக் கொண்டு 2020-2021 ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 26 இலட்சத்து 28 ஆயிரமும், தொடராச் செலவினமாக ரூபாய் 13 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

36. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலம் மண்டபம் கடல்சார் நீரகழாய்வு மையம் ரூபாய் 2 கோடியே 23 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்ப் பல்கலைக்கழகக் கடல்சார் தொல்லியல் துறை மூலம் இராமேஸ்வரம் அருகில் உள்ள மண்டபத்தில் 1990-91 வரை இயங்கி வந்த நீரகழாய்வு மையத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்குத் தமிழக அரசு தொல்லியல் துறை, தேசியக் கடலகழாய்வு நிறுவனம் (NIO, Goa) தமிழ்நாடு அரசுப் பொதுப்பணித்துறையின் மரபுசார் பாதுகாப்புக் கட்டடமைப்பு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து வல்லுநர் குழுவை அமைத்து அறிவுரைகளைப் பெற்றுச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 23 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் 2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும்.

37. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாளை ஆண்டுதோறும் நிறுவனர் நாளாகக் கொண்டாடப்படவும் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகச் சுற்றுச் சுவர் உயர்த்திக் கட்டவும் ரூபாய் 1 கோடியே 77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாளை உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும். மேலும் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் சுற்றுச்சுவர் உயர்த்தி அமைக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 75 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

38. தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் உள்கட்டமைப்பு மேம்படுத்திட ரூபாய் 22 இலட்சத்து 76 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் உள்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்தும் வகையில் அலுவலகப் பயன்பாட்டிற்கு 28 கணினிகள் மற்றும் அதன் துணைப் பாகங்கள், 5 அச்சு பொறிகள் மற்றும் 5 பன்முக செயல்பாட்டு ஒளிப்படி இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 22 இலட்சத்து 76 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு மற்றும்
தொல்லியல் துறை அமைச்சர்

இலக்கிய வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால், மொழியை வளர்ப்பதற்காக முதன்முதலாக அமைப்பைக் கண்டவர்கள் தமிழர்கள் என்பது தெரியவரும். சங்கம் வைத்து மொழி வளர்த்தவர்கள் தமிழர்கள். இயேசு பிறப்பதற்கு முன்பே, தமிழ்ச் சங்கங்கள் இருந்துள்ளன.

❖ மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

உலகத்திலேயே ஒரு மாநிலம் **'நாடு'** என்று சொல்லப்படுகிற அளவுக்கு மொழியோடு சேர்த்துப் பெயர் வைக்கப்பட்டுள்ளது என்றால் அது நம் தாய்த் தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரிய மிகப்பெரிய பெருமையாகும்.

❖ **எடப்பாடி திரு.கே.பழனிசாமி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்